*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*15 04 2026 WEDNESDAY 7 15 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

***1.*** *வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க, நீர் சேமிப்பு உள்ளிட்ட ஒன்பது உறுதிமொழிகளை நாட்டு மக்கள் அனைவரும் ஏற்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.*

***2.*** *மகளிர் இடஒதுக்கீடு மசோதாவிற்கு ஆதரவு அளிப்பதாக கூறியுள்ள காங்கிரஸ், அதனை செயல்பாட்டிற்கு கொண்டு வரும் விதம் தான் ஏற்புடையதல்ல என்று தெரிவித்துள்ளது.*

***3.*** *CBSE பத்தாம் வகுப்பு தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.*

***4.*** *ஐ.நா அமைப்பு வலுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை சீனா வலியுறுத்தியுள்ளது.*

***5.*** *ஆசிய Heyball சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Amee Kamani வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

*>>>>>><<<<<<*

*வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க, நாட்டு மக்கள் அனைவரும் 9 உறுதிமொழிகளை ஏற்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.*

*கர்நாடக மாநிலம், Mandya-வில் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.*

*நீர் சேமிப்பு, இயற்கை வேளாண்மை, உடற்பயிற்சி, மரக்கன்றுகளை நடும் இயக்கத்தில் பங்கேற்பது, உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு ஆதரவளிப்பது, எண்ணெய் பயன்பாட்டை குறைத்துக் கொள்வது, சிறுதானிய பயன்பாட்டை அதிகரிப்பது, உள்ளூர் சுற்றுலாவிற்கு ஊக்கமளிப்பது போன்றவை இந்த உறுதிமொழிகளில் அடங்கும் என்றும் திரு. நரேந்திர மோடி கூறினார்.*

*>>>>>><<<<<<*

*மகளிர் இடஒதுக்கீடு மசோதாவிற்கு எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி ஆதரவு உள்ளதாக காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.*

*இன்று புதுதில்லியில் எதிர்க்கட்சித் தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*அந்த மசோதாவை செயல்பாட்டிற்கு கொண்டு வரும் விதத்திற்கு தான் எதிர்ப்பு தெரிவிப்பதாக திரு, மல்லிகார்ஜுன கார்கே தெளிவுபடுத்தினார்.*

*>>>>>><<<<<<*

*நாட்டின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*கடந்த நிதியாண்டில் ஏற்றுமதி 4 புள்ளி இரண்டு இரண்டு சதவீதம் அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளதாக தொழில் மற்றும் வர்த்தக துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

பெட்ரோலியப் பொருட்களின் ஏற்றுமதி, 5 புள்ளி எட்டு எட்டு சதவீதம் அளவிற்கும், பொறியியல் பொருட்களின் ஏற்றுமதி 1 புள்ளி ஒன்று மூன்று சதவீதம் அளவிற்கும், கைவினைப் பொருட்களின் ஏற்றுமதி எட்டு புள்ளி ஐந்து ஒன்று சதவீதம் அளவிற்கும் அதிகரித்துள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

தகவல் தொழில்நுட்பத்தின் பலன்கள் தொலைதூர பகுதிகளுக்கும் சென்றடைய வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக தொலைத்தொடர்பு துறை இணையமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதுதொடர்பாக அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட பின்னர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பொதுஇடங்களில் Wifi சேவையை மேம்படுத்துவதற்கான அம்சங்கள் குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டதாக டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் இந்தியா முன்னணியில் உள்ளதாக சர்வதேச ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொழில்நுட்ப பயன்பாடு தொடர்பான தரவரிசையின், முதல் ஐந்து நாடுகள் பட்டியலில் இந்தியா இடம்பெற்றுள்ளதாக அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் இந்தியா விரைவாக வளர்ச்சியை கண்டு வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

பீகாரில் வளர்ச்சியை மட்டுமே கருத்தில் கொண்டு தமது அரசு செயல்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சாம்ராட் சௌத்ரி கூறியுள்ளார்.

முதலமைச்சராக பதவியேற்ற பின்னர், அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியதை தொடர்ந்து, வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

CBSE பத்தாம் வகுப்பு தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.

இதில் 93 புள்ளி 7 சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெற்றதாக CBSE-யின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மாணவிகளின் தேர்ச்சி விகிதம் 94 புள்ளி ஒன்பது ஒன்பது சதவீதமாகவும், மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 93 புள்ளி ஆறு ஆறு சதவீதமாகவும் உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

55 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் 95 சதவீதத்திற்கும் கூடுதல் மதிப்பெண்களை பெற்றுள்ளதாகவும், 2 லட்சத்திகும் மேற்பட்ட மாணவர்கள் 90 சதவீதத்திற்கும் கூடுதல் மதிப்பெண்களை பெற்றுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ஜம்மு கஷ்மீரின், அமர்நாத் யாத்திரைக்கான முன்பதிவு இன்று தொடங்கியது.

ஜம்முவில் உள்ள முன்பதிவு மையங்களில், இதற்காக அதிக எண்ணிக்கையில் மக்கள் காத்திருந்த தாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இணையதளம் வாயிலாகவும் முன்பதிவு செய்யப்படுவதாக அவர் மேலும் கூறுகிறார்.

அமர்நாத் யாத்திரை, ஜூலை மாதம் 3-ஆம் தேதி தொடங்கி ஆகஸ்ட் மாதம் 28-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<

சத்திஷ்கடில் பொது சிவில் சட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக குழு ஒன்றை நியமிக்க அம்மாநில அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இன்று ராய்ப்பூரில் முதலமைச்சர் திரு. Vishnu Deo Sai தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

ஓய்வுபெற்ற நீதிபதி திரு. ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையில் அமைக்கப்படும் இந்தக் குழு, பொது சிவில் சட்டத்தை செயல்படுத்துவதற்கான வரைவினை தயாரிக்கும் என்று அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

<u>இனி தேர்தல் களம்…</u>

(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது திருவாரூர் மாவட்டத்துக்கு உட்பட்ட தொகுதிகள்.

>>>>>><<<<<<

ஐ.நா அமைப்பு வலுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை சீனா வலியுறுத்தியுள்ளது.

பெய்ஜிங்கில் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் திரு. Sergey Lavrov-யுடன் நடத்திய பேச்சுக்களின் போது சீன அதிபர் திரு. Xi Jin Ping இதனை தெரிவித்தார்.

இதற்காக சீனாவும், ரஷ்யாவும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு சர்வதேச விவகாரங்களில் தன்னிச்சையாக செயல்படுவதற்கு சீனாவும், ரஷ்யாவும் எதிர்ப்பு தெரிவித்து வருவதாகவும் திரு. Xi Jin Ping கூறினார்.

>>>>>><<<<<<

ஆசிய Heyball சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Amee Kamani வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மலேசியாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>><<<<<<

ஸ்குவாஷ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் Abhay Singh 22-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

Havirov சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் இந்தியாவின் Sutirtha Mukherjee இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-9, 11-7, 11-5 என்ற செட்கணக்கில் தென்கொரியாவின் Lee Dauen-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சத்யன் ஞானசேகரன், மனவ் தாக்கர், மனிக்கா பத்ரா, ஸ்ரீஜா அகுலா உட்பட 10 பேர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி லண்டனில் வரும் 28ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 10-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

>>>>>>end<<<<<<